தாம்பரம் சட்டமன்ற தொகுதியில் ரூ.3.57 கோடி மதிப்பீட்டில் பல்வேறு முடிவுற்ற திட்டங்களான ரூ.39,இலட்சம் மதிப்பீட்டில் காந்தி ரோடு DIALYSIS CENTRE திறப்பு,60வது வார்டு, ரூ.1.40கோடி மதிப்பீட்டில் கல்யாண் நகர் பள்ளி வளாகத்தில் கூடுதல் வகுப்பறைகள் கட்டிடம் திறப்பு,56வது வார்டு ரூ.1.40கோடி மதிப்பீட்டில் மங்கள ஏரி குளத்தை மற்றும் அங்கன்வாடி 12,இலட்சம் சீரமைப்பு பணிகள் முடிவுற்று திறப்பு,முடிச்சூர் ரூ.13,இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடை திறப்பு,திருவஞ்சேரி ரூ.13.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடை என உள்ளிட்டவற்றை கழகப் பொருளாளர், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு பொதுமக்கள் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தார். உடன் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் வசந்தகுமாரி, துணை மேயர்.கோ.காமராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கடந்த 2008ஆம் ஆண்டு பணிகள் துவங்கப்பட்ட வேளச்சேரி பரங்கிமலை இடையேயான பறக்கும் ரயில் திட்டப் பணிகள் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 10 ஆண்டுகள் கிடப்பில் போடப்பட்டு மீண்டும் கழக ஆட்சி அமைந்தவுடன் அப்பணிகள் தொடங்கி 17 ஆண்டுகளுக்கு பின்னர் நேற்று மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்ட பறக்கும் ரயிலில் பரங்கிமலையில் இருந்து வேளச்சேரி வரை கழகத் தோழர்கள், பொதுமக்கள் மற்றும் நலச்சங்க நிர்வாகிகளுடன் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பயணித்தார். அருகில் மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், பகுதி செயலாளர்கள் பி.குணாளன், த.ஜெயகுமார், பொதுக் குழு உறுப்பினர் எம்.எஸ்.கே.இப்பிராகிம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், வட்டச் செயலாளர்கள் ஜெகதீஸ்வரன், நடராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் சாலை விபத்து:

உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிதி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, மார்ச். 15-

விழுப்புரம் மாவட்டம் மற்றும் வட்டம், சென்னை - கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையில் வாணியம் பாளையம் கிராம பேருந்து நிறுத்தம் அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

விழுப்புரம் மாவட்டம் மற்றும் வட்டம், சென்னை-கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையில், வாணியம்பாளையம் கிராம பேருந்து நிறுத்தம் அருகில் நேற்று முன்தினம் (13.3.2026) காலை 6.00 மணியளவில் விழுப்புரம் மாவட்டம், ப.வில்லியனூர் கிராமத்தைச் சேர்ந்த இருபதுக்கும் மேற்பட்ட நபர்கள் கரும்பு வெட்டும் வேலைக்காக நான்கு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது கோலியனூரிலிருந்து பண்ருட்டி வழியாக எம்.சாண்ட் ஏற்றி வந்த டிப்பர் லாரி ஒன்று எதிர்பாராதவிதமாக நான்கு சக்கர வாகனத்தின் பின்பக்கமாக மோதிய விபத்தில் அந்த வாகனத்தில் பயணம் செய்த சேகர் (வயது 65) என்பவர் உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் பலத்த காயமடைந்து முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் வீரவேலு (வயது 65) திருமதி செங்கேணி (வயது 58) திருமதி பாக்கியம் (வயது 55) மற்றும் சுதாகர் (வயது 45) ஆகிய நான்கு நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா 1 இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்தவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

தடகளப் போட்டிகளில் பதக்கங்கள் குவித்துவரும்

தங்கை திவ்யாவிற்கு வீட்டு மனைப்பட்டா!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, மார்ச் 15-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத் தளப் பதிவு வருமாறு:-

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி கீழ் பேட்டையைச் சேர்ந்த கல்லூரி மாணவி தங்கை திவ்யா.

கிருஷ்ணகிரியில் இன்றைய தினம் மாலை, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் நாம் பங்கேற்ற போது, கோரிக்கை மனு ஒன்றை அளித்தார்.

அதில், அவர் தடகள போட்டி களில் பங்கேற்று பல்வேறு பதக்கங்க ளைக் குவித்து வருவதாக குறிப்பிட்டு இருந்தார்.

மாற்றுத்திறனாளியான அவரு டைய தாயார் திருமதி.சங்கீதாவின் ஊக்குவிப்பில், விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வருவதாக கூறிய திவ்யா, அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வேண்டும் என்று கோரி இருந்தார்.

அவர் கோரிக்கை விடுத்த 2 மணி நேரத்தில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழி காட்டுதலின்படி, மாவட்ட நிர்வா கம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட வீட்டுமனைப் பட்டாவை, அவரது தாயார் சங்கீதாவிடம் வழங்கி வாழ்த் தினோம்.

குரலற்றவர்களின் குரலாக திகழும் நம் திராவிட மாடல் அரசின் உட னடி நடவடிக்கைக்கு நன்றி தெரி வித்த தங்கை திவ்யா மற்றும் அவரது தாயார் சங்கீதாவின் அன்பில் நெகிழ்ந்தோம்.

அவர்களுக்கு என்றும் துணை நிற்போம்!

இவ்வாறு துணை முதல்வர் அவர் கள் தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கண்டன உரை!

காஞ்சி வடக்கு மாவட்டத்தில் 14 இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு பல்லாவரத்தில் பங்கேற்பு!

காஞ்சிபுரம்.மார்ச்.15-

சமையல் எரிவாயு தட்டுப்பாட்டைக் கண்டித்தும் - தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் - அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் 14 இடங்களில் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெற உள்ளது.

செங்கல்பட்டில் நடைபெறம் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச்செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்களும், பல்லாவரத்தில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்களும் கண்டன உரை ஆற்றுகின்றனர்.

ஒன்றிய பா.ஜ.க. - NDA அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையாலும் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததாலும் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள சமையல் ஏரிவாயு (LPG) தட்டுப்பாட்டைக் கண்டித்தும், தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய - நகர - பகுதி - பேரூர்களில் இன்று 15.3.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் "மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் 14 இடங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

செங்கல்பட்டு இராட்டிணக்கிணறு அருகில், செங்கல்பட்டு தொகுதியில் அடங்கியுள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம். செங்கல்பட்டு நகர செயலாளர் ச.நரேந்திரன் தலைமையில் நடைபெறுகிறது. மாவட்ட காங்கிரஸ் தலைவர் பிரபு அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கண்டன உரை ஆற்றுகிறார்.

செங்கல்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், மாவட்ட ம.தி.மு.க செயலாளர் பாரத் ராஜேந்திரன், மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் பாரதி அண்ணா, மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் செயலாளர் ராஜ்குமார், மாவட்ட விடுதலைகள் கட்சி செயலாளர் கனல் விழி, மாவட்ட முஸ்லீம் லீக் தலைவர் ஷேக் தாவூத், மாவட்ட விடுதலைகள் கட்சி அமைப்புச் செயலாளர் இரா.தமிழரசன், மாவட்ட மனித நேய மக்கள் கட்சி செயலாளர் முகமது யூனூஸ், மாவட்ட திராவிட கட்சித் தலைவர் செம்பியன், மாவட் தே.மு.தி.க துணை செயலாளர் ஆர்.கண்ணன், மக்கள் நீதி மய்யம் மாவட்ட நிர்வாகி எஸ்.ஜெயவேல்,

தி.மு.க தலைமை செயற்குழு உறுப்பினர் க.அன்புச்செல்வன், நகர மன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன், நகர தி.மு.க செயலாளர்கள் ஜெ.சண்முகம், எம்.கே.டி. கார்த்திக், த.வினோத்குமார், ஒன்றிய தி.மு.க செயலாளர்கள். பி.சந்தானம், எம்.டி.லோகநாதன், கே.பி.ராஜன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாவட்ட - ஒன்றிய - நகர - பேரூர் நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

முடிவில் நகர காங்கிரஸ் தலைவர் பால விக்னேஷ், விடுதலை சிறுத்தை கட்சி நகர செயலாளர் ருத்ர குமார் ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

பல்லாவரம் பேருந்து நிலையத்தில் மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் இ.கருணாநிதி தலைமையில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு கண்டன உரை ஆற்றுகிறார்.

தாம்பரத்தில் மாநர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, செம்பாக்கத்தில் மாவட்ட காங்கிரஸ் தலைவர் செந்தில்குமார், பம்மலில் மாவட்ட ம.தி.மு.க செயலாளர் மாவை மகேந்திரன், திருக்கழுக்குன்றத்தில் விடுதலை சிறுத்தைகள் துணைப் பொதுச் செயலாளர் எஸ்.எஸ்.பாலாஜி,

குன்றத்தூரில் மாவட்ட தே.மு.தி.க செயலாளர் நாகை முருகேசன், திருப்போரூரில் மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் செயலாளர் பாரதி அண்ணா, மாங்காட்டில் மனிதநேய மக்கள் கட்சி துணைப் பொதுச் செயலாளர் எம்.யாக்கூப், அய்யப்பன்தாங்களில் விடுதலை சிறுத்தைகள் மாவட்ட செயலாளர் கிருபா நிதி, திருப்பெரும்புதூரில் மாவட்ட காங்கிரஸ் தலைவர் எஸ்.ஏ. அருள்ராஜ் ஆகியோர் கண்டன உரை ஆற்றுகின்றனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் பாசிச பா.ஜ.க அரசைக் கண்டித்து நாளை 27 ஆம் தேதி காலை 10.00 மணியளவில் கழகப் பொருளாளர் - கழக மக்கள் எவை குழுத் தலைவர் டி.ஆர். பாலு எம்.பி., அவர்கள் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

தாம்பரம் மாநகர தி.மு.கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

மாவட்டக்கழக அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதன்ன எம்.எல்.ஏ, து.மூர்த்தி மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி இக்கண்டன ஆர்பாட்டத்தை முடித்து வைத்து கண்டன உரையாற்றுகிறார்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் தலைமைச் செயற்குழு - பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து ஒன்றிய - நகர - பகுதி - பேரூர்களில் அடங்கி உள்ள வார்டு - கிளைகளில் இருந்து கழகத்தினர் அனைவரும் ஆயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்கும் படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தாம்பரத்தில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பது "நமது கடமை நமது உரிமை" என்ற அந்த உணர்வோடு மாவட்டம் முழுவதிலும் இருந்தும் கழகத்தினர் அனைவரும் தமது கரங்களில் கழகத்தின் இரு வண்ணக்கொடியை ஏந்தி ஆயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்று, நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறி உள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சியில் பேரூராட்சி தலைவர் மு.தேவராஜ் தலைமையில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் திட்டப் பணிகளை துவக்கி வைத்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், ஒன்றியப் பெருந்தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புசெழியன், தெற்கு ஒன்றிய செயலாளர் பையனூர் சேகர், ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் பி.லோகநாதன், எஸ்.அஸ்கர் அலி, வி.சந்திரன், ஆர்.பரசுராமன், மு.க.ரவி, எஸ்.ஏழுமலை, ஜி. வாணி, சசிகலா, டி.செங்குட்டுவன், சிபி சக்கரவர்த்தி, ஆனந்தன், பி.லோகநாதன், லட்சுமி அன்பழகன், கே. சந்திரன், டி.பரணிதரன் மற்றும் கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.

இறுதிக்கட்டப் பேச்சுவார்த்தையில் சுமூக முடிவு எட்டப்பட்டதையொட்டி

தமிழ்நாடு மின்வாரிய ஊழியர்கள் - அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு ஒப்பந்தம்!

அரசு செய்தி வெளியீடு!

சென்னை,மார்ச்.15-

தமிழ்நாடு மின்வாரிய ஊழியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, போக்குவரத்து மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 01.12.2023 முதல் தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு குறித்து ஏற்படுத்தப்பட்ட குழுவினருடன், தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் இதர சங்க நிர்வாகிகளுடன் பல கட்ட பேச்சு வார்த்தை நடத்தி இறுதியாக ஊழியர்களுக்கு, 01.12.2023-ம் நாளன்று பெறும் ஊதியத்தில் 6சதவீதம் ஊதிய உயர்வும், 01.12.2023-ம் நாளன்று, 10 வருடங்கள் பணி முடித்த ஊழியர்களுக்கு பணிப் பலனாக (Service Weightage) 01.12.2023-ம் நாளன்று பெறும் ஊதியத்தில் 3சதவீதம் ஊதிய உயர்வும் வழங்குவது என முடிவெடுக்கப்பட்டு அறிவிக்கப்படுகிறது. மேலும் 01.12.2023 அன்று 10 வருடங்கள் பணி முடித்த அலுவலர்களுக்கு 01.12.2023-ம் நாளன்று பெறும் ஊதியத்தில் 3சதவீதம் பணிப் பலனாக (Service Weightage) வழங்குவது எனவும் அறிவிக்கப்படுகிறது. மேலும், அலுவலர்களுக்கு ரூ.3,000/- முதல் ரூ.7,000/- வரை சிறப்புப்படி வழங்கவும் ஆணையிடப்படுகிறது.

மேற்காணும் அறிவிப்பினை தொடர்ந்து, தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் அலுவலர் சங்கம் நிர்வாகிகள் ஆகியோர் 13.03.2026-ம் அன்று தமிழ்நாடு மின்வாரிய தலைவர் முன்னிலையில் தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இறுதி கட்ட பேச்சு வார்த்தையில் சுமூக முடிவு எட்டப்பட்டது. இவ்வூதிய உயர்வு மூலம் ஏற்படும் நிலுவைத் தொகை 01.12.2023-ம் நாள் முதல் கருத்தியலாகக் (Notional) கணக்கிட்டு, 01.12.2025-ம் நாள் முதல் பணப் பலன்கள் வழங்கவும். மேலும், இடைப்பட்ட காலத்திற்கு அதாவது 01.12.2023 முதல் 30.11.2025 வரை கருணைத் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் கணக்கிட்டு 24 மாதங்களுக்கு வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 01.12.2025 முதல் 28.02.2025 வரை வழங்கப்பட வேண்டிய நிலுவை தொகையினை ஒரே தவணையாக வழங்கவும் முடிவு செய்து அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வூதிய உயர்வு வாயிலாக, அனைத்து ஊழியர்களும் மற்றும் அலுவலர்களும் பயன் அடைவார்கள் என்பதனை கூடுதலாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி உத்திரமேரூர் பேரூராட்சியில் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ விளையாட்டு வீரர்களுக்கு வழங்கினார் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம் ஒன்றிய செயலாளர்.கெ. ஞானசேகரன். பேரூர் செயலாளர் என் எஸ் பாரிவள்ளல் பேரூராட்சி மன்ற தலைவர்.. பொன். சசிகுமார். துணைத் தலைவர். திருமதி இளமதி கோவிந்தராஜ் உள்ளிட்ட ஒன்றிய பேரூராட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.